දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507, 011 2694033
Telephone ) 011 2675449, 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය ) MA/MS/L/4/2014(tem)
எனது இல )
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2018.02.
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

01-60 /2017(i)

பிரதி பணிப்பாளர் நாயகம் - தேசிய வைத்தியசாலை,
வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்கள்
பணிப்பாளர் - இராணுவ வைத்தியசாலை, கடற்படை வைத்தியசாலை, விமானப்படை வைத்தியசாலை, பொலிஸ் வைத்தியசாலை
பணிப்பாளர் (நிர்வாகம்-5) மத்திய நிர்வாகக் கிளை

**சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தர மருத்துவ அலுவலர்களுக்கான இணையதள மின் கண்காணிப்பு முறைமை**
**(Online E-Surveillance system for grade Medical Officers)**

மேற்படி விடயம் தொடர்பாக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு செயலாளரின் 01-60/2017 எனும் இலக்க 06.11.2017 ஆம் திகதிய பொது சுற்றறிக்கைக்கு உமது கவனத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றீர்.

சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் பணியாற்றும் சகல மருத்துவ அலுவலகர்களுக்கும் இணையதள மின் கண்காணிப்பு முறைமை **(Online E-Surveillance system)** ஒன்றினை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. அதனூடாக உமது அதிகார வரம்பின் கீழுள்ள வெவ்வேறு சுகாதார நிறுவனங்கள்/பிரிவுகளில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் சுய விபரக்கோவையை **(Personal file)** கையாளும் சம்பந்தப்பட்ட விடய எழுதுனரால் பதிவு செய்யப்படும் தகவல்கள் **Online valid google sheet** உடைய மத்திய அமைச்சில் பேணப்படும் மருத்துவ அலுவலர்கள் தரவுத்தள தகவல் முறைமைக்கு தானாகவே உள்வாங்கப்படும்.

இதுவரை தேசிய வைத்தியசாலை உள்ளடங்களாக சகல போதனா வைத்தியசாலைகள், மாகாண வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், விஷேட பொது சுகாதார இயக்கங்கள் உள்ளடங்களாக சகல சுகாதார நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டு பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் சுயவிபரக் கோவையை கையாளும் எழுதுனரால் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் இந்த தரவுத் தாளை பேணுவதற்கும், நாளது வரைப்படுத்துவதற்கும் 01-60/2017 எனும் இலக்க 06.11.2017 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெவ்வேறு நிறுவனங்கள், வாட்டுகள், பிரிவுகளில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் விபரங்கள் இந்த தகவல் தாளில் தனித்தனியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது பிராந்திய சுகாதார சேவைகள் . பணிப்பாளர் அலுவலகங்களுக்குரிய பெரும்பாலான ஆதார வைத்தியசாலைகள் சொந்த தரவுத் தாளை தயார் செய்து நாளது வரைப்படுத்துகின்றது. ஆனால் சில ஆதார வைத்தியசாலையின் தரவுகள் சம்பந்தப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் **(RDHS)** அலுவலகத்தினால் பதியப்படுகின்றது. அவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தரினால் மருத்துவ அலுவலர்களின் தகவல்கள் பதியப்படும் போது அவர்கள் பணியாற்றும் பிரிவு, வாட்டு, அந்தந்த நிலையங்களில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் சரியாக உள்ளடக்கப்படாததால் வருடாந்த இடமாற்றப் பட்டியல் தயாரிக்கும் போது சிக்கல்கள் ஏற்படுகின்றது.

ஆகையால், **Online google sheet** ஊடாக அந்தந்த வைத்தியசாலைகளிலேயே உமது மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் அவர்களது சொந்த தரவுகளை பதிவதற்கு தரவு முறைமை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வைத்தியசாலைகளில் உள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குமாறு அறிவிக்கப்படுகின்றது. அவ்வாறு செய்வதற்கு வைத்தியசாலைகளில் அலுவலர்கள் போதுமானதாக இல்லாவிட்டால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஊடாக அந்த தரவுகளை உள்ளடக்கும் போது ஆதார வைத்திசாலைகளுக்கு தனித்தனியாக **Online google sheet** இனை பாவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலும் மருத்துவ அலுவலர்கள் பணியாற்றுவதால் அந்த காரியாலயங்களிலும் இந்த **Online google sheet** நாளது வரைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும்.

நீர் **view only** வசதியை கொண்டிருந்தால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வாட்டுகள் மற்றும் பிரிவுகள் வரையான வெவ்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் தகவல்களை பார்வையிட முடியும். அவ்வாறே மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாணங்களுக்குள் உள்ள சகல நிறுவனங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் தகவல்களை பார்வையிட முடியும். இந்த **view only** வசதியை பெறுவதற்கு இந்த நேரடி தரவு தாளுக்காக **(live data sheet)** மாத்திரம் உருவாக்கப்பட்ட தனியான **g-mail** முகவரி ஒன்றை மருத்துவ சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். அதன்படி, **Online google sheet** தகவல் முறைமை ஒன்றை இதுவரை பேணாத ஆதார வைத்தியசாலைகள் தொடர்பில் அந்த நிறுவனங்களுக்குரிய சுயவிபரக்கோவைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலருக்குப் பதிலாக **g-mail** முகவரி ஒன்றை (உதாரணமாக **bhteldeniya@gmail.com)** தயாரித்து அந்த கடமையை மேற்கொள்ளும் அலுவலரின் பெயர், கையடக்கத்தொலைபேசி இலக்கம் மற்றும் நிறுவனத் தலைவரின் பெயர், கையடக்கத்தொலைபேசி இலக்கம் என்பவற்றை மருத்துவ சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் **HRMIS** பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.



இந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு இணைய வசதிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி ஆகக் குறைந்தது கிழமைக்கு ஒரு தடவை விபரங்களை நாளது வரைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிலைநிருத்தமான அமைப்பு முறைமை ஒன்று உருவாக்கப்படும் வரை அடிக்கடி அதனை மேற்பார்வை செய்யுமாறும் வழிகாட்டுகைகளை வழங்குமாறும் மாதாந்த அறிக்கையை சரியான முறையில் பூர்த்தி செய்து உமது ஒப்பத்துடன் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முன் மருத்துவ சேவை பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் உமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு **HRMIS** பிரிவில் மருத்துவ சேவை பணிப்பாளர் டாக்டர் பிரியந்த அதபத்து அவர்களிடம் 071-2561499 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

**டாக்டர் அமல் ஹர்ஷ டி சில்வா**
**பிரதி பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) II**